
# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவராண்டு 2012
ஐப்பசி 30
முஹற 17
ஞாயிறு (15-11-1981)
நிறுவியது 1947
புத்தகம் 35
இதழ் 45
☎ 8164
விலை: ரூபா 1,50


# "ஈழ விடுதலை இயக்கத்தை உருவாக்கிய தமிழ் தலைவர்களால் இனி அதைக் கட்டுப்படுத்தமுடியாது! சமாதானத்துக்கான காலகட்டம் கழிந்துவிட்டது!'

லண்டன் 'சண்டே ரைம்ஸ்' இதழில் அதன் சிறப்பு நிருபர் இயன் ஜாக் கட்டுரை

"சிங்கள - தமிழ் இனங்களுக்கிடையே காணப்படும் அரசியல் தீர்வுகள் தோல்வியுறுமாலுல், அதன் விளைவு பீதியூட்டுவதாக அமைந்துள்ளது. சமாதானப்பேச்சுக்கான காலகட்டம் கழிந்துவிட்டது என்பதுதான் இருபகுதியினரதும் [...]தாகும். தமிழ் அரசியல்வாதிகள்உருவாக்கிய (விடுதலை)இயக்கம் இன்று கருத[...]து கட்டுப்பாட்டுக்குள் இல்லை" அவர்கள்[...]இருந்து

இவ்வாறுலண்டனில[...] வெளிவரும் "சண்டே[...] ரைம்ஸ்', (SUNDAY TIMES) 18-10-1981 இதழில் அதன் சிறப்பு நிருபர் இயன் ஜாக் (IAN JACK) எழுதியுள்ளார்.

எலிசபெத் மகாராணியின் சிறீலங்கை வருகையை யொட்டிய செய்திகளைத்திரட்ட வெனப்பிரத்யேகமாகக் கொழும்புக்கு வந்திருந்த 'சண்டே ரைம்ஸ்' நிருபர் ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டம் பற்றியும் கொழும்பிலிருந்து தனதுஇதழுக்கு செய்திக் கட்டுரை யொன்றை அனுப்பியிருந் தார்.

BLOODSHED BEYOND THE BEACHES STAINS FACE OF PARADISE (கரையோரங்களில் காணப்படும் இரத்தக்கறை 'சுவர்க்கத்தின்' முகத்தை மாசுபடுத்துகின்றது) என்ற தலைப்பில், SRILANKA - DIVIDED NATION எனும் உப தலைப்பில் திரு. இயன் ஜாக் எழுதியுள்ள கட்டுரையில்குறிப்பிட்டிருக்கும் முக்கிய பகுதிகள் வருமாறு:-

விசாரணையின்றித் தடுப்புக்காவலில் வைத்தல், வீதிகளில் இராணுவக் கெடுபிடி, பத்திரிகைச் செய்தித் தணிக்கை போன்ற அம்சங்களைக் கொண்ட அவசரகாலஆட்சி நடைபெறும் தீவுக்கு-நாடாளுமன்றத்தை பெரியஎதிர்க் கட்சியினர் பகிஷ்கரிக்கும் இலங்கைத் தீவுக்கே மகாராணி வருகை தருகிருர்-

ஜனுதிபதி ஜெயவர்த்தனுவின் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி ஈழக்கோரிக்கைதான் இதற்குக் காரணம் என்று கூறுகிறது,

தமிழர்கள் தனிநாடுகோருகிருர்கள். பகைமையுணர்வு கொண்ட சிங்களப் பெரும்பான்மையினரால் ஆளப்ப[...]டுக்குள் இருப்பதால், தங்களுக்கு எதுவித எதிர்காலமும் காணப்படாதிருப்பதே தனிநாட்டுக் கோரிக்கைக்குக் காரணம் என்று பிரிவினைவாதிகள்கூறுகிருர்கள்.

வடக்குகிழக்குமாகாணங்களில் வாழும் தமிழர்கள் தமிழீழம் அமைப்பதிலேயே தமது எதிர்காலம் முழுமையாகத் தங்கியுள்ளதாகநம்புகிருர்கள், குறைவான வசதி கொண்ட எத்தனையோ நாடுகள் வளர்ச்சியடைந்து தனி நாடாகவாழவில்லையாஎன்று அவர்கள் கேட்கிருர்கள்-சிங்கப்பூரைஉதாரணமாகஅவர்கள் காட்டுகிருர்கள்-

யாழ்ப்பாணத் தமிழர்கள் வாக்குரிமையையும் பயன்படுத்துகிருர்கள்; சிலவேளைகளில் தமது இலட்சியத்தில் தாம் கொண்டஈடுபாட்டை நிரூபிக்க கொலையும் செய்கிருர்கள்- சிறீலங்கா நாடாளுமன்றத்திற்கு அதிகாரபூர்வமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 16 உறுப்பினர்களைக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தே தேர்தலில் வெற்றியீட்டியது.

கடந்த வாரம்,சைக்கிளில் சென்ற சிலயாழ்ப்பாணஇளைஞர்கள், ஓர் இராணுவ வீரரைச் சுட்டுக் கொன்று இன்னெருவரைக் காயப்படுத்தியுள்ளார்கள். இந்த ஆண்டு ஆரம்பத்தில், யாழ்ப்பாண வீதிகளில் நான்கு பொலீசார் முதுகில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டனர். மற்ருேர் அரசாங்க ஆதரவாளரும் கொல்லப்பட்டார். கடந்த நான்கு ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் 20பொலீசார் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்: ஈழப் புலிகள் என்றுஅழைக்கப்படும்தீவிரவாதிகளேஇதற்குப்பொறுப்பாளிகள் எ[...]று கருதப்படுகிறது.

இதற்கு எதிராக,அதிகாரபூர்வமாகவும், அதிகார பூர்வமற்ற முறையிலும் இடம் பெற்ற எதிர்த் தாக்குதல் மிகவும் பாரதூரமானவை.

தென்னிலங்கையில்வாழ்ந்த தமிழர்கள் தங்கள் நகரங்களை விட்டுஓடினுர்கள்.அவர்களது பெண்கள்கற்பழிக்கப்பட்டார்கள்; கொலை செய்யப்பட்டார்கள்-அவர்களது வீடு வாசல்கள்கடைகள்தீயிடப்பட்டன-

யாழ்ப்பாணத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலைக் கண்காணிக்கவென அனுப்பப்பட்ட 300க்கு மேற்பட்ட சிங்களப் பொலீசார்தமது சகாக்கள் சுடப்பட்டஅன்று இரவுகலவரங்களிலீடுபட்டு வெறியாட்டம் போட்டனர். 100க்கு மேற்பட்ட கடைகளை எரித்தனர். அபூர்வமாகக் கிடைக்கக்கூடிய 97000புத்தகங்கள் யாழ்ப்பாண நூலகத்தில் எரிக்கப்பட்டன.ஒருதொழிற்சாலை, ஒருசெய்தித்தாள் அச்சகம், பிரிவினை கோரும் யாழ்ப்பாண மாநகரத்தின் நாடாளுமன்ற

—8-ம் பக்கம் பார்க்க

## அவரால் முடியவில்லையா?




மேலேயுள்ள கார்ட்டூன் உபாலி முதலாளியின் புதிய ஆங்கில வார ஏடான "ஐலண்ட்" 8.11.81 இதழில் இடம்பெற்றுள்ளது. மேலே தரப்பட்டுள்ளதலைப்பு மட்டுமே எம்முடையது, ஜே. ஆர். ஜெயவர்த்தனு அமிர்தலிங்கத்தின் (கூட்டணியின்) தோளில் கைபோட்டபடி "உம்மால் பாய்ந்து சென்று அதன் (புலியின்) தலையைப்பிடிக்க முடியுமா?" என்று கேட்கிருர். கூட்டணியின் முகத்திலும் பீதி காணப்படுகிறது, புலியின் நெற்றியில் பொட்டும் காணப்படுகிறது•

# தென்னாபிரிக்க காப்பிரி மக்களின் சுதந்திரப் போரில் புதிய முறை!

## அடக்குமுறை அரசின் பொருளாதாரத்தை சீர்குலைப்பதே அவர்களின் யுத்த தந்திரம்

தோலின்நிறம்கறுப்பு, கறுத்தவர்கள் காட்டுமிராண்டிகள். ஆட்சிசெய்யும் உரிமை அவர்கட்கு இல்லை. கறுப்புநிறக் காப்பிலிமக்கள்தம் சொந்தமண்ணிலேயேஇரண்டாந்தரக்குடிமக்கள் எண்ணிக்கையில்பெரும்பான்மையினர், ஆனாலும்ஆட்சி உரிமைஇல்லை.

வந்தேறு குடிமக்கள்வெள்ளையர் எண்ணிக்கையில் சிறுபான்மையினர் (ஆனாலும் ஆட்சி அவர்கள் கைகளில் பொருளாதார வளர்ச்சி வெள்ளையரின் கைகளில், பாதுகாப்பும் அரணும்வெள்ளையர் கைகளில். கறுப்பரை அடக்குவோம், ஆட்சி செலுத்துவோம் தென் ஆபிரிக்காவை ஆட்சிசெய்வோம் என மார்தட்டி வீராப்புப் பேசிக் கொடுங்கோலாட்சி நடத்தும் வெள்ளையர்கள் காட்டுமிராண்டிகள்! அல்ல நாகரீகமடைந்தவர்கள்?

கறுப்புநிறக் காப்பிலிகள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை, எங்கள் நாடு,எங்கள் நிலம்,எங்கள் மக்கள்எங்கள் பொருளாதாரம் எப்படி ஆளமுடியும் வெள்ளையர் ஏன் அடங்கவேண்டும் நாங்கள் பொறுத்தது போதும் பொங்கி எழுவோம் போர் முரசுகொட்டுவோம் வெள்ளையரின் கொடுங் கோலாட்சியை வேரோடு அறுத்தெறிவோம். நீதியும் நல்லாட்சியும் நிறைந்தவிடுதலையும் வீர உள்ளமும் சிறந்த நாடாகமாற்றுவோம்— இவ்வாறு காப்பிலிகள் குரல் எழுப்புகின்றனர் போராடுகின்றனர்,

அடக்கப்பட்ட இந்தமக்களுக்காகஉலகம் முழுவதும் குரல்கொடுக்கின்றது. ஒடுக்கப்பட்டமக்களின்விடுதலைக்காகஉலகநாடுகள் பலஒன்றிணைந்து உதவ வருகின்றன. வெள்ளையரின்தென் ஆபிரிக்க அரசுக்கு வெளிநாடுகளில் மதிப்பு இல்லைஅந்தஸ்து இல்லை, ஆதரவு இல்லை.

**அடக்கு முறையைப்போக்கக் காப்பிலி மக்கள் பல வழிகளில் போராடுகின்றனர், அறவழி போராட்டம் ஒரு புறம், மாணவர் போராட்டம் ஒரு புறம், தெருச் சண்டைகள் ஒரு புறம். வன் முறையாளர் போராட்டம் ஒரு புறம் தொழிலாளர்போராட்டம்ஒரு புறம் தென் ஆபிரிக்கஅரசின்பொருளாதார வலுவை ஆட்டங்காணச்செய்யப்பல முனைகளில் இவ்வாறு போராடுகின்றனர்,**

பொருளாதார வலுவை வீழ்த்தினால்அரசுநிலைக்காது கறுப்பு இனமக்களின் ஆதரவின்றிப் பொருளாதாரத்தைவளர்க்கமுடியாதுஎன்ற நிலைவரவேண்டும்பொருளாதார அபிவிருத்திக்குவேட்டு வைத்தால் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தால் சுரங்கங்கள் தொழிற்சாலைகள் கடை தெருக்கள்வெறிச்சோடிக்கிடந்தால்அரசுஆட்டங்காணலாம் என எல்லா முனைகளில் இருந்துபோராடுபவர்களும் திட்டம் போட்டுச் செயற்படுகின்றார்கள்.

தென் ஆபிரிக்காவில்நிலக்கரி ஏராளம். ஆனால் எண்ணெய்வளம் கிடையாது. அரேபிய நாடுகள் எண்ணெய் வழங்காமல் அரசின் குரல் வளையை நெரித்தன, வெள்ளையரோ நிலக்கரியில் இருந்து ஒருவகை எண்ணெய் தயாரித்தனர்- நிலைமையைச்சமாளிக்க மாபெரும் ஆராய்ச்சி நிலையமும் தொழிற்சாலையும் அமைத்தனர், உலகம் வியக்கும் வண்ணம் நிலக்கரியில் இருந்து எண்ணெய் வடித்தனர்,

நிலக்கரியில்இருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை உலகிலேயே தென் ஆபிரிக்காவில்தான் பெரிய அளவில் செயற்பட்டது.

நிலம் கறுப்பருடையது, நிலக்கரி கறுப்பருடையது. தொழில நுட்பமும் திட்டமும் வெள்ளையருடையது. உற்பத்திப்பொருளின் வலிமையில வெள்ளையர் கறுப்பரை அடக்கினர் ஆட்சி செய்தனர்-

வெடிச்சத்தம் கேட்டது. எண்ணெய்த் தாங்கிகள் உடைந்தன- நெருப்புப்பற்றியது- ஆராய்ச்சி நிலையமும் தொழிற்சாலையும் சின்னாபின்னமாகியது- பரந்தநிலப் பரப்பில் விரிந்து பரவிய நெருப்பு அணைய வாரங்கள் பல கழிந்தன- திட்டங்கள் எரிந்தன- தொழிற்சாலை தீப்பட்டது- பல ஆண்டுகள் சென்றாலும் மீள அமைக்க முடியாதபடி நாச வேலை நடைபெற்றது எண்ணெய் பற்றாக்குறை ஏற்பட்டது-

உலகம் அதிர்ந்தது. காப்பிலிமக்களின் சுதந்திரத் தீ விடுதலை வேட்கை அடக்குமுறையை அறுத்தெறியும் கரங்கள் வன்முறை வழியை நாடியதை உலகம் அரசுக்குச்சுட்டிக்காட்டியது- அரசு அலமந்தது ஆட்டம் கண்டது.

பொருளாதாரச் சீர்குலைவைப் படிப்படியாக ஏற்படுத்தினால் அடக்குமுறையில் இருந்து விடுபடலாம் எனக் காப்பிலிமக்கள் நம்புகின்றார்கள்—செயற்படுகின்றார்கள்-

**—மறவன் புலவன்**

---

## சிறீலங்கா பொலிசாரின் ஒழுக்கம் கப்பலேறுகிறது!

சிறீலங்காப் பொலீசாரின் ஒழுக்கம், கட்டுப்பாடற்ற தன்மை சட்டத்துக்குவிரோதமாக நடத்தல், ஆகியபண்புக்கேடுகள் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும்நாற்றமடிக்கத்தொடங்கியுள்ளன,

சிறீலங்காவைச் சேர்ந்த பொலீஸ் இன்ஸ்பெக்டர்ஒருவர், தனது மனைவியுடன், 20ஆயிரம் ஸ்டேர்லிங் பெறுமதியானபோதைப்பொருட்களுடன் லண்டனில்வைத்து லண்டன் பொலீசாரால் கைதுசெய்யப் பட்டுள்ளார், இப்போதைப் பொருட்கள் சிறீலங்காவின்பெறுமதி ஏழு இலட்சம் ரூபாவாகும்.

இச்சம்பவம் குறித்து லண்டன்பொலீசார் சிறீலங்கா பொலீஸ் தலைமைச் செயலகத்துக்கு தகவல் கொடுத்துள்ளது. இப்போதைப் பொருட்கள் கடத்தலின் பின்னணியில்சிறீலங்காமலேசியா ஹொங்கொங் ஆகிய நாடுகளைச்சேர்ந்த முக்கிய புள்ளிகள் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டது.

---

## தமிழுக்கு முதலிடமளித்த பெயர்ப் பலகை அகற்றப்பட்டது!

தமிழ் மக்களே நூற்றுக்கு நூறுவீதம் வாழும் யாழ் மாவட்டதிலுள்ள புங்குடுதீவு உதவிஅரசாங்க அதிபர் சுற்றுலாப் பணிமனையின் பெயர்ப்பலகையில் தமிழுக்கு முதலிடம் அளிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தும்உத்தியோகமொழியான சிங்களத்துக்கே முதலிடம் அளிக்கப்பட வேண்டுமென்றும் நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இருவர் கோரியிருந்தனர் அல்லவா?

இதை தொடர்ந்து தமிழுக்கு முதலிடம் அளித்து எழுதப்பட்டிருந்த அப் பெயர்பலகை கழற்றப் பட்டுவிட்டது. யூ.என்.பி அரசின் நட்புக்கரம் இது தான், விடாதுபற்றிக்கொள்ளுங்கள்,

---

## கூட்டணி இல்லாத குறை தீர்ந்தது! றொனி மகிழ்ச்சி

"புதிய வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ள சூழ்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நாடாளுமன்றத்துக்கு வரத் தீர்மானித்தது மகிழ்ச்சிக்குரியது- அவர்களின் கருத்துக்கள் அவதானத்துடன் எடுத்துக்கொள்ளப்படும். கூட்டணியினர் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு பாராளுமன்றத்துக்குச் சமூகமளிப்பது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. அவர்களின் முடிவு வரவேற்கத்தக்கது கூட்டணியினர் இல்லாவிட்டால் நாடாளுமன்றத்தில் அது பெருங் குறையாகவே இருந்திருக்கும். அந்தக்குறை தீர்ந்துவிட்டது"

இவ்வாறு நிதி அமைச்சர் றொனிடீமெல் 6.11.81 வீரகேசரிக்குத் தெரிவித்துள்ளார்.

---

## எண்ணிக்கை பெரிதல்ல எண்ணமே பெரியது

நமது கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மிகச் சிலரே. அவர்களும் கூட பிரெஞ்சுக் காலனி ஆதிக்கவாதிகளால் அடிக்கடி கைது செய்யப்பட்டு, சிறையில்அடைக்கப்பட்டனர். ஆனால் நமது கட்சி தொடர்ந்து முன்னேறி நடைபோட்டது. ஆகஸ்டுப் புரட்சி நடைபெற்ற போது, சிறையில் இருந்தவர்களையும் சேர்த்து நம்கட்சியில் அன்று உறுப்பினர்களாக இருந்தவர்கள் 5000 பேர்தான். 5000 பேருக்கும் குறைவான கட்சி உறுப்பினர்கள்தேசத்தின் இரண்டு கோடியேநாற்பதுஇலட்சம்மக்களின் எழுச்சிக்குத்தலைமைதாங்கி வெற்றிக்கு வழிவகுத்தனர்.

இவ்வளவு மகத்தான வெற்றிகளை நமது கட்சி எவ்வாறு சாதித்தது? அந்தக்காலத்தில்ஒருபுரட்சிவாதி,புரட்சி வெற்றிவாகை சூடும்வரை, அல்லது தான் கைது செய்யப்படும்வரை- அல்லது கொலை செய்யப்படும்வரை தனது பணிகளைச் செய்தே தீரவேண்டும். கட்சியின்இறுதி வெற்றி அசைக்க முடியாதது என்ற உறுதியான நம்பிக்கை இருந்ததால். யாராவது ஒருதோழர் கைது செய்யப்பட்டால், அவரது ஸ்தானத்தை இன்னொருவர் ஈடு செய்தார், இதே போல யாராவது ஒருவர் கொல்லப்பட்டால், அவரது கடமையை ஈடுசெய்ய ஒரு நூறு பேர் தயாராக இருந்தனர், இதனால்தான்மிகக்குறைந்தஉறுப்பினர்களே இருந்தபோதிலும். புரட்சிக்குத் தலைமை தாங்கி அதனை வெற்றி பெறச் செய்யக்கட்சியால் முடிந்தது. கட்சிஉறுப்பினர்களின்செயற்பாட்டிலும், வீரஞ்செறிந்த பல எடுத்துக் காட்டுக்களைக் கூறலாம்.

உதாரணமாக, எண்ணற்ற தோழர்கள், மாதக்கணக்கில் நிலவறைகளில் தலைமறைவு வாழ்க்கை நடத்திக் கொண்டே பிரச்சாரப் பிரசுரங்களை எழுதினார்கள். புத்தகங்களையும் செய்தித் தாள்களையும் மொழிபெயர்த்தார்கள். அந்தத் தோழர்கள் தலைமறைவு நீங்கி வெளிவந்துகதிரவனின், ஒளியைச்சந்தித்தபோதுஅவர்களதுகண்பார்வை ஏற்கெனவே மங்கிப் போய்விட்டதென்பதுதெரியவந்தது. இன்னும் பல தோழர்கள் எதிரியின் சித்திரவதைகளுக்கு ஆளாகிப் பல முறை நினைவாற்றல் இழந்தார்கள்; ஆனால் அவர்கள் ஒரு வார்த்தை கூட எதிரியிடம் விடவில்லை. நமது ஊழியர்களும் கட்சி உறுப்பினர்களும் சதையாலும், இரத்தத்தாலும் உருவான மனிதப் பிறவிகள்தாம். ஆனால் கட்சியின் மீதும் தொழிலாள வர்க்கத்தின் மீதும் கூட்டு உழைப்பின் சக்தி மீதும் அவர்கள் கொண்டிருந்தநம்பிக்கைஇறுதி மூச்சுவரை போராடும் மனோதிடத்தை அவர்களுக்கு அளிக்கிறது கட்சி உறுப்பினர்களாகிய நாம் மிகவும் சாதாரணமானவர்களே. ஏனெனில் நாம் தொழிலாளி வர்க்கத்தின் பிள்ளைகள். பாட்டாளி வர்க்கத்திற்கு நாம் விசுவாசமாக இருப்போம். மக்களுக்காகப் போராடத்தயங்கமாட்டோம் நாம் மிகமிகச் சாதாரணமான மக்கள் என்கிறஉண்மையே நமது கட்சியை மகத்தான தாக்குகிறது, தந்தை நாட்டின் நலன் தொழிலாளி வர்க்கத்தின் நலன் ஆகியவைகளுக்கப்பால், வேறு எந்த நலனையும் நமது கட்சி அறியாது.

**—வியட்னாமின் தந்தை தோழர் ஹோ—சி—மின்**

# ‘குவீபெக்கைப்’ பாரீர்!

அன்பு நண்பா,

சுதந்திரத்துக்குப் போராடுகின்ற நாடுகள் ஒவ்வொன்றும் உரிய நேரம் வருகிறபோது, அதைச் சரியாகப் பயன்படுத்தி தன்னுடைய அடிமைத் தளையை அறுத்தெறிந்திட முயற்சிக்குமே தவிர ஏதோ ஒவ்வோர் சாட்டுக்களையும் சமாதானங்களையும் கூறிக்கொண்டு அச்சந்தர்ப்பங்களைக் கோட்டைவிட்டுவிடாது! விடுதலை உணர்வுகளைக் கிள்ளியெறிந்திட முயற்சி செய்திடார் அந்நாட்டின் விடுதலைப் படையை நடத்திடும் தலைவர்கள்!

சுயநலம் சிறிதுமின்றி தேச விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்திடும் தலைவர்கள் நேற்றும் இதைத்தான் செய்திட்டனர்; இன்றும் செய்திடுகின்றனர்; நாளையும் செய்வார்கள்; என்றும் செய்துகொண்டே இருந்திடுவர்.

இதோ அதற்கோர் உதாரணம் காட்டுகிறேன்!

கனடாநாட்டில் பிரெஞ்சுமொழி பேசும் மக்களைக்கொண்ட குவீபெக்மாகாணம் பூரண சுதந்திரம் கோரிப்போராடிவருவதனை நீ அறிந்திடுவாய்! அக்‘குவீபெக்’மக்களுக்குதமது குறிக்கோளை நிலைபெறச்செய்திட இப்போது அரியதோர் சந்தர்ப்பம் தோன்றியுள்ளது; அதைக் கோட்டைவிடுவார்களா அவர்கள்?

கனடாவுக்கு 1931ஆம் ஆண்டு சுதந்திரம் வழங்கப்பட்டபோதிலும், கனடிய அரசமைப்பின் அதிகாரம் கடந்த 114 ஆண்டுகளாகத் தொடர்ந்து பிரிட்டனிடமேயேயிருந்து வந்திருக்கிறது,

அதாவது இலங்கைத்தீவு1948ஆம் ஆண்டு சுதந்திரம்பெற்றபோதிலும்,1972ஆம் ஆண்டு மே 22வரை பிரிட்டனிடமேயே இலங்கைமக்களின்இறைமையிருந்து வந்ததுபோல!

இப்போது பிரிட்டனிடமிருந்துபூரண விடுதலைபெற்று அதனுடனான சகல தொடர்புகளையும்துண்டித்துக்கொண்டு தனக்கென ஒருதனியான அரசியலமைப்பினை உருவாக்கிக் கொள்ளுவதற்கு கனடாவின் பிரதமர் ட்ரூடோ வேண்டிய ஆயத்தங்களைச்செய்து வருகிறார்.

பதினொருமாநில அரசுகளைக்கொண்ட கனடாவில், பிரிட்டனிலிருந்துவிடுபட்டுக் கனடாவுக்கென சுதந்திர அரசியலமைப்பினை உருவாக்கும் தமது திட்டத்துக்குகனடாவின்பத்து மாநில அரசுகளின் ஆதரவையும்பெற்று விட்டார் பிரதமர் ட்ரூடோ.

ஆனால் நீண்டகாலமாகப் பிரிந்து சென்று தனிநாடு அமைப்பதற்காகப் போராடிவரும் குவீபெக் மாகாணத்தின் ஆதரவை — குவீபெக் பிரதமரின் ஆதரவை—திரு. ட்ரூடோவினால் இப்பிரச்சினையில் பெற்றுக்கொள்ளவே முடியவில்லை.

கனடாவின்பத்துமாநிலஅரசுகள் கனடாப் பிரதமர் ட்ரூடோவுடன் சேர்ந்துநின்றபோதிலும், பதினோராவது மாநிலமான ‘குவீபெக்’ மாநில அரசு அதைக்கண்டு அஞ்சி நடுங்கவில்லை.பயந்துபின்வாங்கிடவில்லை.தன்னந்தனியனாக நின்று “சுதந்திரகுவீபெக்” இலட்சியத்துக்குப்போராடப் போவதாக அதுஅறைகூவல் விடுத்துள்ளது.

ஆம் கனடாவில்இன்றுதோன்றியுள்ளஇந்த அரசியல் நெருக்கடியைச் சரியான முறையில் பயன்படுத்தி, ‘சுதந்திர குவீபெக்’கை நிறுவுவதற்கான பாதையில் முன்னேற குவீபெக்தலைவர்கள் உறுதியுடன் முடிவுசெய்துவிட்டனர்.

குவீபெக் மாகாணத்தின் இணக்கத்தை (CONSENT) பெறாமல், கனடாமுழுமைக்குமான ஓர் அரசியலமைப்பை ட்ரூடோவினால் எப்படி உருவாக்கிடமுடியும்? இத்தகைய ஓர் அரசியல் அமைப்பு நெருக்கடி அங்கே உருவாகியுள்ளது; உறுதி நெஞ்சம் கொண்ட குவீபெக் தலைவர்களால் இந்நிலைஅங்கு உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தனைக்கும் முழுக்கனடாவுக்கும் பிரதமராக விளங்கும் ட்ரூடோ கூட குவீபெக் மாகாணத்தவர்தான். பிரெஞ்சு மொழி பேசுபவர்தான். ஆனால் தனிப்பட்ட ட்ரூடோவின் பதவிப்பெருமையை விட ‘குவீபெக்’ நாட்டின் தன்மானமும் தேசியத் தனித்தன்மையுமே ‘குவீபெக்’இல் வாழும் பிரெஞ்சு மக்களின் நெஞ்சங்களிலே கொழுந்துவிட்டெரிகிறது!

குவீபெக் மாகாணத்தில் வாழும் ஆங்கில மொழி பேசும் சிறுபான்மையினரும், ஏனைய மாகாணங்களில் வாழும் பிரெஞ்சுபேசும் சிறுபான்மையினரும் தத்தம் தாய்மொழிகளில் கல்விகற்கும் உரிமையை கனடாவின் உத்தேச புதிய அரசியலமைப்பு வழங்குகிறது- ஆனால் ‘குவீபெக்’கின் உத்தியோக மொழியாகப் பிரெஞ்சுமொழியைக்கொண்டு வரவிரும்பும் குவீபெக் பிரிவினை இயக்கம் இதனைஏற்க மறுக்கிறது.

குவீபெக்கின் ஒத்துழையாமை இயக்கத்தைஇங்கு ஏன் சுட்டிக்காட்டுகிறேன்என்றால்—விடுதலைப் போராளிகள் சந்தர்ப்பங்களை எவ்வாறு சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்; தமது இலட்சியத்தை அடைய எப்படி எப்படியெல்லாம் முயற்சிக்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டிடத்தான்!

இங்கும் 1972 மே 22ஆம் நாளுடன் பிரிட்டனிடமிருந்த இலங்கைத் தீவின் இரு நாட்டினங்களின் இறைமை அந்தந்த நாட்டினங்களிடமே வந்து சேர்ந்தது!

தமிழீழமக்களின் பிரதிநிதிகளும் குவீபெக் பிரதிநிதிகளைப்போலவே இலங்கைத்தீவு முழுவதுக்குமாக குடியரசு அரசியலமைப்பைஆக்குவதிலும், தயாரிப்பதிலும் அதைச் சட்டமாக்குவதிலும் பங்குகொள்ளமறுத்து ஒதுங்கியிருந்தனர்- பிரிட்டனிடமிருந்து தமிழீழ மக்களுக்கு 1972இல் சட்டரீதியாக மீளவந்து சேர்ந்த இறையாண்மையைப் பிரயோகித்து தமிழீழ நாட்டினம் தனது அரசுரிமையையும் சுதந்திரத்தையும்நிலைநாட்டிக்கொள்ளவேண்டுமென்ற தீர்மானம் 1976ஆம் ஆண்டு மே 14ஆம் நாள் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழீழத் தேசியமாநாட்டில்பிரகடனம்செய்யப்பட்டது!

## அரசியல் மடல்

1977பொதுத்தேர்தல் தமிழீழ சுதந்திரம் பற்றிய மக்கள் வாக்கெடுப்பாகப் பிரகடனப்படுத்தப்பட்டு,தமிழீழத்தேசிய மன்றத்தைக் கூட்டி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும்பொறுப்பும்,கட்டளையும் ஆணையும் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் தமிழீழ மக்களால்ஒப்படைக்கப் பட்டது.

ஆனால் கடந்தநான்குஆண்டுகளாகநடந்து முடிந்திருப்பதென்ன?எந்தச்சிறீலங்கா ஏகாதிபத்தியத்தை எதிர்ப்போம் என்று சூளுரைத்தார்களோ-அதே ஏகாதிபத்தியத்துடன்இன்று அமைதிபேணும் ஒத்துழைப்புப்பேரப்பேச்சும் நடத்துகின்றனர்- விடுதலைப் படையை நடத்திடுவர் என்று நாம்நம்பியிருந்த நமது தலைவர்கள்!

*1977, 1979, 1981*ஆகிய ஆண்டுகளில் அரசு ஆதரவுடன் தமிழ் மக்கள் மீது இடம் பெற்ற வரலாறுகாணாத மிலேச்சத்தனமான குரூரமான கொலை, கொள்ளை, தீவைப்புதாக்குதல்,கற்பழிப்புச்சம்பவங்களின் பின்னர் .மானமுள்ள எந்த ஒரு தமிழனாவது இந்தஅரசோடு பேச்சுவார்த்தைக்குச் செல்வானா?

ஒற்றையாட்சி என்றதனது நிலையிலிருந்து ஓரடிகூட இறங்க மறுத்து— தமிழ்ஈழ நாட்டினத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கமறுத்து—தமிழ் மக்கள் மீது குண்டர் ஆட்சியையும் பொலிஸ் ஆயுதப்படைகளின் அட்டூழியங்களையும் ஒடுக்குமுறைகளையும் ஏவிவிட்டு அச்சுறுத்தி அடக்கியாள முயலும் சிங்கள சிறீலங்கா ஏகாதிபத்திய முதலாளித்துவ கூட்டி வல்லரசுடன் தமிழ்க் குருதியோடும் எந்த ஒருதமிழனும் உட்கார்ந்து பேசமுடியுமா?

**சிங்கள அரசின் அச்சுறுத்தலுக்கும், மிரட்டலுக்கும், குண்டர் ஆட்சிக்கும் கொடுங்கோன்மைக்கும் பயந்து, மக்கள் தந்த ‘சுதந்திரத் தமிழீழம்’ என்ற ஆணையை ஆறு மாதங்களுக்கென்ன—அரை வினாடிக்காவது ஒத்திவைப்பதற்கு இவர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்?**

அரசாங்கம் தமிழீழத்துக்கு ஒருபோதும் இணங்காதென்பது கூட்டணித் தலைவர்களுக்குத்தெரியும்—அதனால் பேச்சுவார்த்தைகளின் போது ‘தமிழீழம்’ சம்பந்தமாகக் கூட்டணியினர்வாயே திறக்கவில்லையென்று வீறாப்புப்பேசுகிறாரே ஜனாதிபதி—இதைக்கேட்டுச்சுய மரியாதையுள்ள விடுதலை வேட்கைகொண்ட தமிழன் அவமானத்தால் குன்றிப்போகிறானே!

கொலைசெய்யப்பட்ட எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்துக்குப்பின்னர் எகிப்தில் அவரது இடத்துக்குவந்த எகிப்தின் புதிய தலைவர் கூட, இஸ்ரேலிடம் திட்டவட்டமாகக் கூறுகிறாரே—பாலஸ்தீனிய மக்களின் சுயநிர்ணய உரிமையை இஸ்ரேல் அங்கீகரித்தால் மட்டுமே பேச்சுவார்த்தையென்று!

இங்கும் அப்படித்தானே அடிக்கடி உறுதியோடு கூறி வந்தார் முன்பு நமது செயலாளர் நாயகம்; தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்தால் மட்டுமே பேச்சுவார்த்தைக்குவருவோம்என்று எத்தனை தடவை அடித்துக் கூறினார்கள் இதற்குமுன்பு?

இன்று கையறுநிலையில்—சாமியே சரணம் ஜெயவர்த்தனா என்று ஜே-ஆர்காலில் வீழ்ந்து தமிழ்ஈழப்பிரசாரத்துக்கும் ஆறுமாதகாலத்துக்குஇடைக்கால முற்றுப்புள்ளி வைப்பதற்கும் உடன்பட்டு பேச்சுவார்த்தை நடத்திப் பெற்றுக்கொண்டபயன் தான் என்ன?

பயங்கரவாதத்தையும் வன்முறைகளையும் பூண்டோடு அழிக்க அரசுக்கு முழு ஒத்துழைப்பும் நல்குவோம் என்றுசத்தியவாக்குக்கொடுக்கிறார்கள் இவர்கள்!

ஆஹா, அமிர்தலிங்கம் எவ்வளவு அருமையானமனிதர்.நம்பிக்கையானமனிதர்.என்றுமுதுகில் தட்டிக்கொடுக்கிறார்ஜே.ஆர்.புலிகள்இயக்கத்துக்கும் கூட்டணிக்கும் தொடர்பு கிடையாதென்று தாம் நம்புவதாகஜனாதிபதியின்அருள் உபதேசம் சுரக்கிறது! வசிட்டர் வாயால் பிரம்மரிஷிப்பட்டம் வாங்கியது போலஅதிலேஇவர்களுக்கொரு விதமன ஆறுதல்!

**பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அரசுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி கூட்டணி ஒத்துழைக்காவிடின்—அடுத்த நடவடிக்கையெடுக்கப்படுமென்று ஜே. ஆர். வாயிலிருந்து மிரட்டல் வேறு!**

பல்லாயிரக்கணக்கான பொலீஸ் படை. இராணுவம், கடற்படை. விமானப்படை, தமிழீழ விடுதலைப்புலிகள் தடைச்சட்டம், பயங்கரவாத தடுப்பு தற்காலிக ஏற்பாடுகள் சட்டம் இவை போதாதென்று அவசரகாலச் சட்டம்—இத்தனைக்கும் மேல் குந்தியிருக்கும் ஜெயவர்த்தனாவினால் ‘பயங்கரவாதம்’ என்று அவர்களால் கூறப்படும் செயல்களை ஒழித்துக்கட்டமுடியாதபோது—காந்தீயம்பேசும் கூட்டணியினர் அதை எவ்வாறு ஒழிக்கப்போகிறார்களோ? தன்னால் இயலாத பொறுப்பை கூட்டணிமீது சுமத்தி, ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் கூட்டணியை ஆசை வலையில் வீழ்த்திவிட்டார் ஜே, ஆர்.

இந்த வலையை அறுத்துக் கொண்டு கூட்டணி வெளியேற வேண்டுமானால், கூட்டணித் தலைவர்களுக்கு, நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும்எந்தப்பதவியையும் இழக்கும் மனோநிலையும் எதிர்க்கட்சித்தலைவர் பதவியென்பது ஏதோகிடைத்தற்கரிய பெரும்பேறென்று கருதும் அற்பஆசைகளையும் விட்டொழித்து, ஜெயவர்த்தனாவின் கட்டுப் பாடுகளையும் உடன்படிக்கைகளையும் முறித்துக்கொண்டு தமிழீழ விடுதலை முழக்கமெழுப்பியபடி விடுதலைப் போராட்டத்தில்ஒத்துழையாமை இயக்கத்தில் குதித்திடவேண்டும்கூட்டணி!

காலம்வீணே ஓடிக் கொண்டிருக்கின்றது. நமது அடிமைத்தளைநொடிக்குநொடி இறுக்கப்படுகின்றது. அவ்வாறுமேலும்இறுக்குவதற்கே கூட்டணிஅரசுக்குக்கொடுக்கும் ஒத்துழைப்பு பயன்படப்போகிறது ஒத்துழைப்பு அல்ல—ஒத்துழையாமையேதமிழனுக்குஇன்றுதேவை என்பதை உணர்வார்களாதலைவர்கள் என்ற பெயரைச் சுமந்துள்ளோர்?

உன் அன்புத் தோழன்

கோவை மகேசன்

# ஒத்துழைப்பு - ஓர் பொறிக் கிடங்கு!

"வடக்கிலும் நாட்டின் வேறு சில பகுதிகளிலுமிடம்பெறும பயங்கரவாத சக்திகளைப் பூண்டோடு அழிப்பதற்கு அரசாங்கத்துக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகத் தமிழர்விடுதலைக் கூட்டணி உறுதி மொழி அளித்திருக்கிறது.

"தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் புலிகள் இயக்கம் என்று கூறப்படுவோருக்குமிடையே தொடர்பு கிடையாதென்பதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

"அமிர்தலிங்கத்தின் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது"

மேற்கண்டவாறு, சிறீலங்காவின் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன 3.11.81 இல் நடைபெற்ற தமது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசியிருப்பதாக நாளேடுகள் கூறுகின்றன.

இது தமிழ் மக்களுக்கு ஒரு புறம் திகைப்பையும் மறுபுறம் வியப்பையும் ஏற்படுத்துகிறது,

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் மீது அரசாங்கக் கட்சியினர் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியதும், அவ்விவாதத்தின் போது திரு. அமிர்தலிங்கத்தையும் தமிழ் மக்களையும் தமிழ் இனத்தையும் கீழ்த்தரமாக அவமதித்து உரைகள் நிகழ்த்தப்பட்டதும் தமிழன் ஒவ்வொருவனுடைய நெஞ்சிலும் ஆழமான மாறாத புண்ணாக வேரோடி இருக்கிறது.

திரு. அமிர்தலிங்கத்துக்கு எதிரான மேற்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதும் அதன் மீது அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் வாய்க்கு வந்தபடி பேசியதும் ஆரம்பத்திலேயே தவிர்க்கப்பட்டிருந்திருக்குமாயின்-கடந்த ஆகஸ்டில் தீவின் பலவேறுபகுதிகளிலும் தமிழர்கள் குரூரமாகக் கொலை செய்யப்பட்டதும், கற்பழிக்கப்பட்டதும், கொள்ளையிடப்பட்டதும் — மற்றும் ஏனைய வன்செயல்களும நடந்து முடிந்த அளவுக்கு உச்சக்கட்டத்தையடையாதவாறு சில சமயங்களில் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் அமிர்தலிங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்கு அப்போது அனுமதியளித்தவரே சாட்சாத் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவே தான்; ஜனநாயகம், நாடாளுமன்ற மரபுகள் அனைத்தையும் கரைத்துக் குடித்த ஜனாதிபதியே அம்மரபுகளுக்குமுரணாக எதிர்க்கட்சித்தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு இசைவு அளித்திருந்தார்.

இசைவு அளித்தது மட்டுமல்ல—எந்த ஒரு வரையறையுமின்றி அரசாங்கக்கட்சி உறுப்பினர்கள் சுதந்திரமாகத் தாம் விரும்பியவாறு பேசுவதற்கும் அனுமதி அளித்தார்.

அமிர்தலிங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்துநிறைவேற்றுவதற்கு தமது கட்சியினருக்கு ஜனாதிபதி பூரண சுதந்திரம் அளித்த போது, ஜனாதிபதிக்கும் திரு. அமிர்தலிங்கத்தின் மீது நம்பிக்கை இருக்கவில்லையென்றே அர்த்தம் கொள்ள வேண்டியுள்ளது. இல்லையெனில்,அப்பிரேரணையைக் கொண்டு வர அவர் அனுமதித்திருக்கமாட்டார்.

அதாவது அமிருக்கு எதிரான பிரேரணை 1981 ஜூன் மாதம் 24 ஆம் திகதிநாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு அரசாங்கக் கட்சி வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி ஐந்து அம்சக் கோரிக்கையை தீவிரமாக வலியுறுத்தி நாடாளுமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாமலிருந்த காலம்.

அன்று அமிர்தலிங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றிய அரசாங்கக் கட்சியின் தலைவருக்கு இன்று திடீரென அமிர் மீது நம்பிக்கை பிறந்திருப்பதேன்?

**எண்ணம்**

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடம் ஆறுமாதங்களுக்கு தமிழீழப் பிரசாரம் செய்வதில்லையென்ற இடைக்கால முற்றுப் புள்ளிக்கு (MORATORIUM) உடன்பட்டதனாலா?

ஐந்து அம்சக் கோரிக்கையில் இறுக்கமாகவும் பிடிவாதமாகவும் இருக்காமல், அவற்றையெல்லாம் விட்டுக் கொடுத்து, எதிர்க்கட்சியில்லாத நாடாளுமன்றம் என்னும்குறையைப் போக்கிடக் கூட்டணியினர் மறுபடியும் நாடாளுமன்றப் பிரவேசம்செய்ததன பிரதிபலிப்பா?

'பயங்கரவாதிகளை' ஒழித்துக்கட்டுவதற்கு அரசுடனும்,அரசின் படைபட்டாளங்களுடனும ஒத்துழைப்பதற்குக் கூட்டணித்தலைமை இணங்கியதனாலா?

சிறீலங்கா சுதந்திரக் கட்சியுள்ளிட்ட ஐந்து எதிர்க்கட்சிகளின் கூட்டணியை 'அம்போ' என்று விட்டு விட்டு, அரசாங்கத்துடன் ஒத்துழைக்க கூட்டணித் தலைவர்கள் முன் வந்திருப்பதனாலா?

ஒன்றுமே புரியவில்லை!

தமிழின சங்காரம் ஒன்று பயங்கரமான முறையில் நடந்து முடிந்த பின்புதான் அமிர்தலிங்கம் மீது ஜனாதிபதிக்கு நம்பிக்கை பிறந்திருக்கிறதா?

பயிற்சிபெற்ற பொலீஸ்படை, கமாண்டோக்கள் உளவுப்படை, இராணுவம், கடற்படை, விமானப்படை, இத்தனையும் கொண்ட ஓர் அரசாங்கத்தினால் ஒழித்துவிட முடியாத "பயங்கரவாதத்தை" காந்தீய நெறிமுறைகளைப் பின்பற்றுவதாகக் கூறும் கூட்டணியின் ஒத்துழைப்புடன் மட்டும் அழித்து விடலாம் என்று அரசு எதிர்பார்ப்பதுதான் வேடிக்கையாகவும் விசித்திரமாகவும் தோன்றுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தடைச்சட்டம், பயங்கரவாத தடுப்பு (தற்காலிக) ஏற்பாடுகள் சட்டம், அவசரகாலச் சட்டம்—போன்ற பல்வேறு பயங்கர, பாசிச சட்டங்களையும் கையில் வைத்துச் செயற்படுத்திக்கொண்டிருக்கும் அரசாங்கம் 'பயங்கரவாதத்தை' ஒழிப்பதற்கு கூட்டணியின் ஒத்துழைப்பை நாடுவதாகநடிப்பதில்தான் பெரிய சூழ்ச்சி நிறைந்து இருப்பதாக நாம் சந்தேகிக்கிறோம்;

**கூட்டணி ஒத்துழைத்தும் 'பயங்கரவாதத்தை'ஒழிக்கமுடியவில்லையென்ற நிலை சில காலத்தின் பின் ஒருவேளை தோன்றுமானால் — அதையே ஒருசாட்டாகவைத்துக்கொண்டு தமிழ் ஈழத்தில் சாதாரண சட்டங்களை முற்றாகச் செயலற்றதாக்கி, முற்று முழுதான இராணுவ ஆட்சியையும் இராணுவ நிர்வாகத்தையும் புகுத்தி, தமிழ் மக்களைக் கொன்றுகுவிப்பதே அரசின் அடுத்த நடவடிக்கையாக அமையலாம்.**

கூட்டணி கொடுத்துள்ள வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறினால், அடுத்த நடவடிக்கை குறித்து அரசு ஆராயும் என்று ஜனாதிபதிவிடுத்திருக்கும் எச்சரிக்கையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தெரிந்துகொண்டே ஜெயவர்த்தன என்ற தமிழின விடுதலை விரோதி தோண்டிய ஒத்துழைப்பு என்ற படுகுழியில் தானும் விழுந்து, தமிழினத்தையும் வீழ்த்தி விட்டதுகூட்டணித் தலைமை.

இதிலிருந்து கூட்டணியையும் தமிழினத்தையும் மீட்பதற்கு வழியென்ன?இதைத்தான் அக்கறையுள்ளவர்கள் சிந்திக்க வேண்டும்,

# சுட்டுக்கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களின் குடும்பங்களுக்கு யாழ் கிறிஸ்தவசங்கம் உதவி

1981 மே, யூன் மாதங்களில் யாழ்ப்பாணத்தில்அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தபோது ஆயுதப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நான்கு அப்பாவித்தமிழர்களின் குடும்பங்களுக்கு யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கம்இருபத்தினான்காயிரம் ரூபாவை உதவித்தொகையாக வழங்கிக் கொழும்புத் தமிழர்களுக்கு முன்மாதிரி காட்டியுள்ளது:

உயிரிழந்த சலவைத் தொழிலாளி சண்முகம்நடேசுவின் விதவை மனைவிஇராசலட்சுமியின் பெயரில் பத்தாயிரம் ரூபாவும், வரணியைச் சேர்ந்த பாலஜோதியின் சகோதரி சிவயோகத்தின் பெயரில் ஆறாயிரம்ரூபாவும், கோப்பாய் பரமேஸ்வரனின் சகோதரியின் பெயரில் ஆறாயிரம் ரூபாவும், யாழ்ப்பாணத்திலுள்ள மேர்க்கண்டைல் கிறெடிற் வங்கியிலிட்டு அவற்றின் சேமிப்புப் புத்தகங்களைசம்பந்தப்பட்டவர்களிடம் கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் கையளித்துள்ளது. இப்பணத்திலிருந்து கிடைக்கும் வட்டிப் பணம் மாதா மாதம் இவர்களது குடும்பங்களுக்கு கிடைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அதேசமயம்தெல்லிப்பளையைச் சேர்ந்தஉயிரிழந்தநவரத்தினம் என்பவரது மகள் புஷ்பராணிக்கு ரொக்கமாக இரண்டாயிரம் ரூபாவை மேற்படி சங்கம் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணகிறிஸ்தவஐக்கிய சங்கம்,1979இல்கொலை செய்யப்பட்ட செல்வம், பரமேஸ்வரன்,இராசேஸ்வரன் ஆகியோரின் மனைவிமார் தையல் நிலையம் தொடங்குவதற்கென ஏற்கெனவே ரூபா40,000வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் மீள்விக்கப்படவிருக்கும் புதிய நூல் நிலையத்துக்குஒன்றரை இலட்சம் ரூபா செலவில் புத்தகங்களை வாங்கி அன்பளிப்புச் செய்யவும் கிறிஸ்தவஐக்கிய சங்கம் தீர்மானித்துள்ளது-

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின்மனிதாபிமானத்தை சுதந்திரன் பாராட்டுகிறது.

---

### பத்திரிகைத் தணிக்கை

அவசரகாலச் சட்டத்தின் கீழ் 21.8.81 பிற்பகலிலிருந்து பத்திரிகைத் தணிக்கையை அரசாங்கம் அமுலுக்குகொண்டுவந்துள்ளது

# இலங்கைத் தமிழர்கள் மீதான வன்முறைத் தாக்குதலை கண்டித்து அவுஸ்ரேலிய உலக இயக்கங்கள் சிறிலங்கா ஜனாதிபதிக்குக் கடிதம்!

இலங்கைத்தமிழர்கள் மீது மனித உரிமைகளுக்கு மாறாகத் தாக்குதல்கள் நடத்தப்படுவதையும், பாரபட்சங்கள் கடைப்பிடிக்கப்படுவதையும் கண்டித்து அவுஸ்ரேலியாவிலுள்ள WORLD DEVELOPMENT TEA CO-OPERATIVE LTD (உலகத் தேயிலை அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனம்) சார்பில் அதன் தலைவர் ELIZABETH BOCCALATTE (எலிசபெத் பொக்காலெட்) சிறீலங்கா ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இக்கடிதத்தில் ANNE WEILING (ACTION FOR WORLD DEVELOPMENT) ANNE LAFFAN (LAND RIGHTS SUPPORT GROUP), JOHN P. BROWN) (GENERAL SECRETARY, COMMISSION FOR WORLD MISSION, UNITING CHURCH IN AUSTRALIA) ஆகியோரும் BOARD OF SOCIAL RESPONSIBILITY] யைச்சேர்ந்த 33 அவுஸ்ரேலியப் பிரஜைகளும் கையொப்பமிட்டுள்ளனர்.

ஜனாதிபதிக்கு எழுதப்பட்டுள்ள கடிதம் வருமாறு:—

அன்புள்ள ஜனாதிபதி அவர்களுக்கு,

இலங்கையில் வாழும் தமிழ்ச் சிறுபான்மை மக்களுக்கு எதிராக வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது சம்பந்தமாக மறுபடியும் எமது கவனம் திரும்பியுள்ளது.

1981ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் திகதி கங்கவத்தை பிரிவு பிரவுன்லோ தோட்டத்தில் நள்ளிரவு நேரத்தில் தமது "லைன்" அறைகளில் தூங்கிக்கொண்டிருந்த தோட்டத்தொழிலாளர்கள் ஈவிரக்கமின்றி அடித்துத் தாக்கப்பட்டதும், அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டதும், 34 'லைன்' அறைகள் சேதப்படுத்தப்பட்டதும், நியாய உள்ளம் கொண்ட எவரது மனதிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய நிகழ்ச்சிகளாகும்.

நட்சா திட்டத்தின் கீழ் உலகவங்கியின் நிதி உதவியுடன், வீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன. ஆனால், சிறீலங்கா அரசாங்கம் உலக வங்கிக்கு கொடுத்த உத்தரவாதத்துக்குமுரணாக, நட்சா வீடமைப்புத்திட்டத்தில் வீடுகள் வழங்குவதில் தமிழ்த் தோட்டத்தொழிலாளர்கள் திட்டமிட்டு பாரபட்சத்துடன் ஒதுக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை அறியும்போது எமது கவலை அதிகரித்துள்ளது.

தமிழ் தோட்டத்தொழிலாளர்கள் மீதான வன்முறைகள், —திட்டமிட்டு அவர்கள்பாரபட்சங்களுக்கு உட்படுத்தப்படுவது—இவற்றுக்கெல்லாம் மொத்தமான அடிப்படைப் பாரபட்சம் அவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டிருப்பதேயாகும்.

## வடமாகாணம்

ஆனால் துன்புறுத்தப்படுபவர்கள் தோட்டப்பகுதித் தமிழர்கள் மட்டுமல்ல—

வடமாகாணம் தொடர்ச்சியாக அவசரகாலச்சட்டத்தினால் ஆளப்பட்டுவருகிறது. கடந்த பல ஆண்டுகளாக, பிரஜைகளின் சாதாரண உரிமைகளே கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆனால் நீர்வேலிக்கொள்ளையையடுத்து, நிகழ்ந்துள்ள சம்பவங்கள், வடமாகாணத் தமிழ் மக்கள் மீது மிக மோசமான ஒடுக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதையே தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

இரு பொலீஸ்காரர்கள் மரணமாவதற்குக் காரணமான அச்சம்பவம் ஒருபுறம் திகைக்கவைத்த போதிலும் —அதற்கு எதிர் நடவடிக்கையாக அரசுப்படைகள் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு எதுவித நீதி நியாயமும் கிடையாது என்றே நாம் கருதுகிறோம். நாம் அறிந்ததகவல்களைக் கீழே தொகுத்துத் தருகிறோம்—

(1) சாதாரண உடைகளில் வந்த அடையாளம் காட்டமுடியாத அரசின் பாதுகாப்புப்படையினரால் மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வீடுகள்கொள்ளையிடப்பட்டுள்ளன.

(2) கைது செய்யப்பட்டவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல், அவர்கள்இரகசிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

(3) உங்கள் அரசாங்கம் தமிழர்களுடன் செய்துகொண்ட இங்கிதமான ஓர் இணக்கம் என்று உலகம் முழுவதும் உங்கள்அரசினால் பிரசாரம் செய்யப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தலின் முன்னரும், தேர்தல் காலத்திலும், தெற்கிலிருந்து வடக்கே கொண்டுவரப்பட்ட கூலிப் படைகள், தமிழ் மக்களுக்கு முழு அச்சத்தையும் பயமுறுத்தலையும் ஏற்படுத்தியதுடன், ஒரு தலைப்பட்சமான கைதுகளிலும் ஈடுபட்டனர். இறுதியாக தியாகராஜா என்ற ஒரு வேட்பாளர் கொலைசெய்யப்பட்டார்.

(4) தமிழர்விடுதலைக்கூட்டணித் தேர்தல் கூட்டத்தில் நிகழ்ந்த குழப்பத்தின் விளைவாக, ஒரு தமிழ்பொலீசாரும், ஒரு சிங்களப்பொலீசாரும் மரணமானதைத் தொடர்ந்து, பொலீசாராலும், ஆயுதப்படையினராலும், கட்டவிழ்த்து விடப்பட்ட கலவரத்தில், சம்பவம் நடந்த இடத்துக்குஅருகில் இருந்த இந்துக்கோவில் கூடஎரிக்கப்பட்டது. ஆனால் இது தொடக்கம் தான்.

(5) யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினரின் வீடு எரிக்கப்பட்டு, முழுமையாக அழிக்கப்பட்டது.

(6) தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகம் முழுமையாக தீயிடப்பட்டு அழிக்கப்பட்டது.

(7) மீளப்பெறமுடியாத 97,000 புத்தகங்களைக் கொண்ட யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது.

(8) உள்ளூர் நாளேடான ஈழநாடு பத்திரிகை அலுவலகம் முற்றாகஎரிக்கப்பட்டது. மேலும் மூன்று பெரிய புத்தகாலயங்கள் எரிக்கப்பட்டன;

(9) முதலில் சொல்லப்பட்ட பொலீசாரைத் தவிர மேலும் மூவர் சாகடிக்கப்பட்டனர். நல்லூர் எம். பி. திரு. சிவசிதம்பரத்தின் வீட்டுத்திண்ணையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த பாலஜோதி, சலவைத்தொழிலாளி சண்முகம் நடேசு, கமநல அதிகாரி எஸ். பரமேஸ்வரன் ஆகியோரே கொல்லப்பட்டோராகும்.

(10) மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் அமைச்சர்களின் நேரடியான தெளிவான தலையீடுகள்.

தோட்டப்பகுதிகளிலும் வடகிழக்குமாகாணத்திலும் வாழும் தமிழ்ச்சிறுபான்மை மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் காட்டுமிராண்டித்தனமான வன்முறைத் தாக்குதல்களையும் அவர்களுக்கு எதிராகப் பின்பற்றப்படும் பாரபட்சங்களையும் இக்கடிதத்தின் மூலம் நாம் மிகவும் கடுமையாகக் கண்டிக்கிறோம்.

இப்பிரச்சினைகள் குறித்து தனிப்பட்டமுறையில் உங்களுடன் கூடியவிரைவில் சந்தர்ப்பம் கிடைக்கும்போது விவாதிக்கவும் விரும்புகிறோம்.

---

—6-ம் பக்கத் தொடர்

ஆம்; விடுதலைபெற்ற வியட்நாமில் சீனவம்சாவளியினர் வெளியேற்றப்படக் கூடிய சூழ்நிலை தோன்றிய போது சீன அரசாங்கம் அவர்களை அகதிகளாக ஏற்றுக் கொள்கிறோம் என்று, வியட்நாமுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள ஓடவில்லை.

அதனால்தான் இன்று அது ஒரு உலகப் பிரச்சினையாகியிருக்கிறது.

## பாலஸ்தீன அரபுக்களும் இலங்கைத் தமிழர்களும்

அதைப் போலவே இஸ்ரேலிலிருந்து வெளியேற்றப்பட்ட பாலஸ்தீனிய அரபுக்கள் பற்றியும், சுற்றிச்சூழ 22 சுதந்திர அரபுநாடுகள்இருந்தும், "அவர்களை நாங்கள் அகதிகளாக ஏற்றுக்கொள்கிறோம்" என்று எந்த அரபு நாடும் இஸ்ரேலுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள ஓடவில்லை.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்றும்அந்தப் பாலஸ்தீனிய அரபு மக்கள் ஐ. நா. வின் பராமரிப்பில் அகதி முகாம்களில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## கடலில் தள்ள முடியாது..

அதனால் ஒன்றும் குடி முழுகிப்போய் விடவில்லை. மாறாக பாலஸ்தீன மண்ணில் அந்த அரபு மக்களுக்குள்ள ஆட்சி உரிமையை அகில உலகமுமே அங்கீகரித்திருக்கிறது, தாயகத்திற்குவெளியேவாழ்ந்தாலும் பாலஸ்தீனத்தின் உண்மையான இறைமை. அவர்களுடையது தான் என்று தரணியே ஒப்புக்கொண்டுவிட்டது. இஸ்ரேலும் இதற்கு இணங்குவதைத்தவிர, வேறு வழியில்லை என்றநிலைநாளும் நாளும் முற்றி வருகிறது.

எனவே, இலங்கை நாடற்றவர்களாக்கி வைத்திருக்கும் தமிழர்களில் ஒரு பகுதியினரையாவது இந்தியாஏற்றுக்கொள்ள முன்செல்லாவிட்டால், இலங்கை அவர்களை ஒன்றும் கடலிலேபிடித்துத் தள்ளிவிட முடியாது. இன்றில்லாவிட்டால் நாளை அவர்கள் எல்லாரையுமே இலங்கையராக ஏற்றுக் கொண்டுதான்தீரவேண்டும். மாறாக, இந்திய அரசுகொஞ்சம் பேரை ஏற்றுக்கொள்ள உடன்படுவதன் மூலம் எல்லாரையுமேஇந்தியாவுக்குத் துரத்திவிட முடியும் என்ற துணிவு சிங்களவர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது.

## தமிழகமே பொங்கி எழு!

'இங்கே உதைத்தால் அங்கே தானே போய் விழுவார்கள்' என்ற தெம்பில் மீண்டும் மீண்டும் இனக்கலவரத்தைத் தூண்டச் செய்கிறது,

அதனால், காலாவதியாகும் லால்பகதூர்—சிறிமா ஒப்பந்தம் அப்படியேகைவிடப்பட, அதையொட்டிச் செய்யப்பட்ட இந்திரா—சிறிமா ஒப்பந்தமும் இறந்துபோனதாக விடப்பட, இனிமேலும் இத்தகையஒப்பந்தங்கள்செய்துகொள்ளப் படாமலிருக்க, தமிழகம் ஒருமித்துக் குரலெழுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இது பற்றிக் கூட்டங்கள் நடத்தியும், ஊர்வலங்கள் எடுத்தும், தீர்மானங்கள் நிறைவேற்றிமத்திய-மாநில அரசுகளுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று. தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும், கட்சிசார்பற்ற அனைத்துப் பொதுநல மன்றங்களையும்விரும்பிவேண்டிக்கேட்டுக் கொள்கிறோம்.

(நன்றி: மர்மம்)

---

விற்பனையாகிறது

NOW ON SALE! LIMITED STOCKS!

WHAT IS THE TRUTH BEHIND THE JAFFNA INCIDENTS?

Read the book that tells the whole story

REIGN OF TERROR IN JAFFNA
May - june 1981

PRICE: Rs. 10.00
SPECIAL EDITION—Rs 12.00
ASK YOUR NEWS AGENTS

### காலாவதியானதை மேற்கொண்டும் நீடிக்காமல்

# சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கையை இந்திய அரசே உடனே கைவிடுக!

## ஈழத்தமிழர் பலத்தைச் சிதைக்கும் எதையுமே எதிர்க்க தமிழகமே எழுக

இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்பற்றிச் செய்துகொள்ளப்பட்டலால் பகதூர்-சிறிமாவோ உடன்படிக்கை இந்த ஆண்டுடன் காலாவதியாகிறது-

அந்த மூல உடன்படிக்கையைத் தொடர்ந்து திருமதி இந்திராகாந்தி, திருமதிபண்டாரநாயகாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையும் அநேகமாக உயிரற்றதாகிறது;

இதை 'சனியன் ஒழிந்தது' என்று இப்படியே விட்டுவிட வேண்டும், இதுபற்றி மேற்கொண்டும் எந்தப் பேச்சு வார்த்தைக்கும் இந்திய அரசாங்கம் இணங்கக் கூடாது.

அப்படிப்பேச்சுவார்த்தை நடத்துவதாக இருந்தால், இலங்கையில் தமிழர்களின் உரிமையை எப்படிக்கட்டிக் காப்பது என்பதாக இருக்க வேண்டுமே யொழிய; அவர்களில் ஒருவரைக்கூட இலங்கையை விட்டு வெளியேற்ற ஒப்புவதாக — அகதி என்று எடுத்துக் கொண்டுஆராய்வதாக இருக்கக் கூடாது.

ஏனென்றால், அனைத்து நாட்டுச்சட்டப்படிஇலங்கையில் அகதி என்பதாகயாரும் இல்லை.

உபகாரம் செய்யாவிட்டாலும், உபத்திரவம் செய்யப் புகுந்த வடஇந்திய அரசியல்வாதிகளால் வந்தவினைதான் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை இலங்கைச் சிங்கள அரசு நாடற்றவர்களாக ஆக்கி வைக்க உதவியது,

லால்பகதூரும், அவரைத் தொடர்ந்து இந்திராகாந்தியும் செய்துகொண்ட ஒப்பந்தங்களோ, அவர்களை இலங்கையை விட்டுத் துரத்தும் துணிவையும் சிங்கள அரசுக்கு ஏற்படுத்திவிட்டது.

ஆம்; காலஞ் சென்ற நேரு பண்டிதர், இலங்கையராகி விட்டமலையகத்தமிழர்களின் அரசியலமைப்பை 'இலங்கை இந்தியர் காங்கிரஸ்' என்ற பெயரில் 1939ல் தொடங்கி வைத்து, இந்தியத் தலைமையின் மேலாதிக்கத்திற்குக் கட்டுப்பட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி வைத்தார். அதன் தலைமையிலும் தமிழரல்லாதபலரும் ஆதிக்கம் செலுத்தும்படி வைத்தார்.

இது இந்திய வம்சாவளித் தமிழர்களை இலங்கைக்குஅந்நியராக்க சிங்களவர்களுக்கு அடியெடுத்துக் கொடுத்ததாக அமைந்தது.

இங்கு "ஏன்; மலேசியஇந்தியர் காங்கிரஸ் இன்றைக்கும் இருக்கிறதே! அங்குள்ள இந்திய வம்சாவளித் தமிழர்கள் நாடற்றவர்களாகவா ஆக்கப்பட்டு விட்டார்கள்?" என்று சிலர் கேட்கலாம்.

அங்கு சீனர்களுடையதாக்கத்தைச்சமாளிப்பதற்குஇந்திய வம்சாவளியினரின் தேவை அவசியம்என்பதால் இலங்கையைப்போல்நடக்கவில்லையே தவிர, இல்லையெனில் அங்கும் இதேகதிதான் ஏற்பட்டிருக்கும்.

உண்மையில் இந்த 'இந்திய' முத்திரையின் காரணமாகத்தான் தமிழர்கள் அங்கு பெறவேண்டிய அளவுக்குத் தேசியத் தகுதியைப் பெறவில்லை என்று கூடச்சொல்லலாம்.

அது மட்டுமன்றி, இந்திய அரசு தாங்கள் வாழும் நாடுகளிலேயே தொடர்ந்து எல்லாவிதஉரிமைகளோடும் இந்தியராகவே வாழஎல்லாவித உதவிகளையும் செய்யும் என்ற குருட்டுத்தனமான நம்பிக்கையில், அந்தந்த நாடும்விடுதலைபெற்றபோது அதன் குடிமக்களாகத் தம்மைப்பதிவு செய்து கொள்ளாமல்வாளாவிருந்து விட்டனர். விளைவு? ஒவ்வொரு நாட்டிலுமிருந்துதமிழர்கள் அகதிகளாகத்துரத்தப்படக் கூடியவர்களாகி விட்டார்கள்!

இல்லையென்றுல் பல்வேறு நாடுகளில் தமிழர்கள் அந்த நாடுகளின் மக்கள் தொகையில் ஒருகணிசமான பகுதியினராக— அந் நாடுகளின் அசைக்க முடியாத ஒரு தேசிய இனமாகஇருந்திருப்பார்கள்,

தமிழர்கள் குடியேற்றப்பட்ட அல்லது குடியேறிய சமகாலத்தில்வேறு நாடுகளில்குடியேறிய ஸ்பானியர்களும் போர்த்துக்கீசியர்களும் இன்றுதம் தாயகத்திற்கு வெளியே சிலசுதந்திர நாடுகளைக் கொண்டு திகழ்வது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

தமிழ்த் தேசியத்தைஇந்தியத் தேசியமாகச் செயல்படுத்தியதன் விளைவு? இன்று தமிழ்த் தேசிய இனம் உலகத்தில் பலநாடுகளில்வாழ்ந்தும் உருப்படாமல் கிடக்கிறது! ஒரேயொரு சுதந்திர நாடு தானும் இன்றித் தவிக்கிறது.

இருப்பினும் இந்தியாசுதந்திரம் பெறுவதற்கு முன்பு செய்த தவறை, சுதந்திரஇந்தியாவின் பிரதமரான நேரு தொடர்ந்து கடைப் பிடிக்கவில்லை.

சுதந்திரம்பெற்றஒருபுதிய நாட்டில் சுதந்திரத்திற்கு முன்பு அங்கு வாழ்ந்த அனைவரும் அதன் சட்ட பூர்வக் குடி மக்களே! அதன்படிஒவ்வொரு நாட்டிலும் வாழும் இந்திய வம்சாவளியினரும் அந்தந்த நாட்டுக்குடிமக்கள் தான். அவர்களை இந்தியா அகதிகளாகஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார்,

நேருவுக்குப் பிறகு வந்த லால்பகதூரும், இந்திராவும் இந்த நிலைப்பாட்டைநெகிழவிட்டதால்தான் பர்மாவிலிருந்து தமிழர்கள் அகதிகளாய் ஓடிவர நேர்ந்தது. இலங்கையிலிருந்தும் தமிழர்களைத் துரத்திவிட முடியும் என்ற எண்ணத்தைச் சிங்கள அரசுக்கு ஏற்படுத்தியிருக்கிறது;

இங்கே பாதிக்கப்படுவது தமிழினம்தான். முக்கியமாகத் தமிழ்நாடுதான் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்-

ஏற்கனவே, வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும் மலிந்துள்ள தமிழ் நாட்டில் 10 இலட்சம் இலங்கை இந்திய வம்சாவளித் தமிழர்களும், அகதிகளாக வந்து புகுவார்களேயானுல் என்னவாகும்? ஏற்கனவே அகதிகளாக வந்த பர்மாத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் படுகிற பாடு போதாதா? அவர்கள் படும் பாடு பஞ்சுதான்படுமோ. சொல்லத்தான்படுமோ!

இந்திய அரசு அவர்களை ஏனைய மாநிலங்களிலும் குடியேற்றத்தானே செய்கிறது என்பதுவாதத்திற்குவேண்டுமானுல்பொருத்தமாக இருக்கும். நடைமுறையில் அவர்கள் எங்கும் ஒண்ட இடமின்றி இங்கு ஓடித்தான் வருவார்கள்; வருகிருர்கள்.



### வெளியேறுவது இந்தியவம்சாவளி மட்டுமல்ல...

மேலும், இலங்கை இந்திய வம்சாவளித் தமிழர்களை நாடற்றவர்களாக ஒப்புக்கொண்டு, அவர்களில் ஒரு பகுதியினரை இந்தியாவுக்கு அழைத்துக்கொள்ளச் சம்மதித்து உடன்பாடு செய்து கொள்வது என்பது, அங்குள்ள பூர்வீகத்தமிழர்களையும் சிங்களவர்கள் அடித்து விரட்ட அனுமதி கொடுப்பதாகவே ஆகிறது.

ஆம்: இந்திய அரசாங்கம் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தால், வெளியேறுவது இந்திய வம்சாவளித் தமிழர்கள் மட்டுமல்லர்; யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதிகளைச் சேர்ந்த பூர்வீகத் தமிழர்களும் இலங்கையை விட்டு வெளியேறித் தமிழ் நாட்டுக்குக் குடியேறவே வழிபிறக்கும்.

### சிங்களவர்க்கு நல்லது செய்ய தமிழர் பலிக்கடாவா?

மொத்தத்தில் சிங்களவர்கள் எதை எதிர்பார்த்து அடிக்கடி இனக்கலவரத்தில் ஈடுபடுகிருர்களோ, அதை, தீவிலிருந்து தமிழர்களை முற்ருக வெளியேற்ற வேண்டும் என்கிற திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளவே அந்த ஒப்பந்தங்கள் உதவி செய்வதாக இருக்கும்.

ஏனெனில், 140 இலட்சத்து 74 ஆயிரம் மொத்த மக்கள் தொகை கொண்ட இலங்கையில் சரியாக மூன்றில் ஒரு பங்கினர் தமிழ் பேசும் மக்களாவார்கள். இதில் மூன்றில் ஒரு பங்கினர் இந்திய வம்சாவளித் தமிழர்களாவர்.

### தமிழினச் சக்தி சிதைவுறும்

இவர்கள் வெளியேற்றப்படுவதோ அல்லது வெளியேறுவதோ, தீவில் தமிழினத்தின் பலத்தைச்சிதைத்து, சிங்களப் பேரினவாதத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கும் சக்தியை ஏனையத் தமிழர்களிடமிருந்துஅகற்றிவிடும்.

அப்போது, அவர்கள் இலங்கையின் சட்டபூர்வக் குடிமக்களாயினும். தீவின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மை மக்களாகச் செறிந்து வாழினும், இப்போது தங்கள் பகுதியைத் தனி நாடாக்கப் போராடி வருகிருர்களாயினும், மொத்தப் பலச் சிதைவின் காரணமாக நம்பிக்கை தளர்ந்து, இந்திய வம்சாவளித் தமிழர்களையே பின்பற்றி, அவர்களும் தமிழ் நாட்டைநோக்கிக் குடி பெயரத்தான் தொடங்கி விடுவார்கள்.

### வரலாற்றைத் திருப்பிவைப்பதா?

இது வரலாற்றையே பின்நோக்கித் திருப்புகிற மாபெரும் தலைகுனிவான செயலாகும்.

ஏனென்றுல், சிங்களவரின் வரலாற்றுப் படியே தமிழரசு ஒன்று பூர்வகாலம் தொட்டு இலங்கையில் இருந்து வந்திருக்கிறது.

ஐரோப்பியர் இலங்கையை ஆக்கிரமித்த நேரத்தில் கோட்டை இராஜ்ஜியம், கண்டி இராஜ்ஜியம், யாழ்ப்பாண இராஜ்ஜியம் என்ற மூன்று முடியரசுகள் இலங்கையில் இருந்திருக்கின்றன. இவற்றில் யாழ்ப்பாண இராஜ்ஜியம் பாரம்பரியமாகவே தனித் தமிழ் இராஜ்ஜியமாகும். ஏனைய இரண்டையும் கூட தமிழரசர்கள் அவ்வப்போது ஆண்டிருக்கின்றனர்.

### இலங்கைத்தமிழ் அரசபரம்பரை

சிங்களவர்களுக்கு இலங்கையில் எப்படி ஒரு அரச பரம்பரை உண்டோ, தமிழர்களுக்கும் அதை விடவும் தொன்மையான ஒரு அரச பரம்பரை இலங்கையிலே உண்டு. எல்லாளன், பரராசசேகரன், செகராசசேகரன், சங்கிலியன், பண்டாரவன்னியன் முதலியோர் முக்கியமானவர்கள்.

இறுதியாக ஆங்கிலேயர் இலங்கை முழுவதையும் தமதாக்க முயன்றபோது, கண்டியில் அரசோச்சிய தமிழ் மன்னன் தான் இலங்கை முழுவதையுமே ஒரு குடைக் கீழ் ஆண்டு வந்திருக்கிருன்.

பிலிமத்தலாவை, எகலபொல என்ற இரண்டு சிங்களவர்கள் காட்டிக்கொடுக்க, சிறி விக்கிரமராஜ சிங்கன் என்ற தமிழனிடமிருந்தே ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றித் தமது சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியத்தில் இணைத்தனர்.

### அந்தச் சிந்தனை அறவே கூடாது!

எனவே, இந்த வரலாற்று அடிப்படையிலான உரிமை, பாரம்பரிய உரிமை, நடைமுறையில் வாழ்ந்து வரும் உரிமை, சர்வதேசச் சட்டப்படியான உரிமை, மனிதாபிமான ரீதியிலான மறுக்க முடியாத உரிமைஅனைத்தையும் உதறி எறிந்து விட்டு, தமிழர்கள் இலங்கையைக் காலிசெய்துவிட்டு வெளியேறவே இந்திய அரசு இலங்கையரசுடன் செய்துகொள்ளும் 'லால்பகதூர்—சிறிமா ஒப்பந்த' மாதிரியிலான எந்த ஒப்பந்தமும் வழிசெய்வதாக இருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும்.

ஆதலால், எதை முன்னிட்டும், எந்தத் தருணத்திலும் இந்திய வம்சாவளித் தமிழர்களை இந்தியர்களாக ஒப்புக்கொள்ளும் எந்த உடன்படிக்கையையும் இந்திய அரசுஇலங்கையுடன்செய்து கொள்வது பற்றி சிந்திக்கவே கூடாது.

### ஐ. நா. வுக்கு கொண்டு செல்க!

அப்படிப்பட்ட சிந்தனை டெல்லியில் தப்பித்தவறியும் ஏற்படத் தமிழக அரசு அனுமதிக்கக் கூடாது.

இலங்கை அரசு முரண்டு பிடிக்குமானுல் இப்பிரச்சினையை ஐ. நா. மன்றத்திற்குக் கொண்டு செல்வதே முறையாகும்.

—5ம் பக்கம் பார்க்க

# விடுதலைப் புரட்சியாளர்களை பயங்கரவாதிகள் என்று அழைப்பது தவறு!

## சௌதரிக்கு பண்டித நேரு அளித்த பதில்கள்

இந்திய விடுதலைப்போராட்டத்தின் முக்கிய தளகர்த்தர்களில் ஒருவரும்மனிதருள் மாணிக்கம் என்று போற்றப்படுபவரும் இன்றையஇந்தியப் பிரதமரின் தத்தையுமான ஸ்ரீஜவகர்லால் நேருவின் பிறந்ததினம்நவம்பர் 14ஆகும். அதையொட்டி NEHRU IN HIS OWN WORDS என்ற பெயரில் RAMANARAYAN CHAUDHARYஎழுதிய நூலிலிருந்து நேருஜியின் சில கருத்துக்களை இங்கு தொகுத்துத் தந்துள்ளோம் —

—ஆசிரியர்

சௌதரி: இந்திய விடுதலைக்கான புரட்சி இயக்கத்தோடுஎந்தச் சமயத்திலாவது உங்களுக்குத்தொடர்பு இருந்ததுண்டா?

நேரு: இடையிடையே எப்போதாவது இரண்டொருபுரட்சியாளர்களைச் சந்தித்து இருக்கிறேனேயல்லாமல்,புரட்சி இயக்கத்துடன் எனக்குத்தொடர்பு இருந்தது இல்லை,

சௌதரி: புரட்சிக் காரர்கள் செய்யும் காரியங்களில் நீங்கள் பங்கு எடுத்துக் கொண்டதுண்டா?

நேரு: இல்லை அவர்கள் நடைமுறைகளில் எனக்கு ஈடுபாடு இல்லை, புரட்சிக் [illegible]ர்களிடம் எனக்கு மதிகார[illegible]டு, பொருள் உதவிப்பு உண்[illegible]ம்போது அ[illegible]ர் தேவைப்படு[illegible]ள் உதவிகளுக்குப் பொரு[illegible]. செய்ததும் உண்[illegible]

சௌதரி: எப்பொழுதாவது உங்களுடன் அவர்[illegible] தங்கியது[illegible]?

நேருஜி: எனது இல்லத்[illegible] எனக்குநினைவுஇல்லை- வந்துபோகும் விருந்தாளிகள்என்னும்வகையில்இரண்டொருமுறைஅவர்கள்தங்கியிருந்திருக்கக்கூடும்- தொடக்கமுதலே அரசியல் வானத்தில் காந்திஜியின் கொள்கைகள் பரவி உரம்பெற்று வருவதற்குமுன்பே பயங்கரமான நடவடிக்கைகள் பயன் அளிக்காது என்பதை நான் உணர்ந்திருந்தேன். தனிப்பட்ட பயங்கரவாதிகளை அவர்களின் வீரத்துக்காக நான் மதித்த போதிலும் அவர்கள் கடைப்பிடிக்கும் போராட்டமுறைகள் பயனற்றவையென்று கருதினேன், அவர்களிடம்சில நற்பண்புகள் காணப்பட்டன. ஒன்று, உயிரையும் பொருட்படுத்தாது முரட்டுத்தனமாகக் காரியத்தில் இறங்கும் துணிச்சல் அவர்களிடம் இருந்தது- அரசியல் அடிமைத்தனத்தில் சிக்கியிருத்தல் சகிக்க வொண்ணுதது என்னும்கருத்தைபொதுமக்களிடையே உருவாக்கும்திறமைஅவர்களிடம் இருந்தது.

சௌதரி; புரட்சிக் காரர்களின் செயல் முறையால் நாடு அடைந்த நன்மையென்ன?

நேரு: கண் கூடாகக் காணும் வடிவத்தில் அவர்களால் ஏற்பட்ட நன்மைகளைக்கணிப்பதுசிரமம்-புரட்சிக்காரர்களின் இயக்கம் முதிர்ச்சிபெறுத இயக்கம் என்பது என் கருத்து. அடக்குமுறைக்கு எதிராககோபத்தை வெளியிட அந்த இயக்கம் பயனுக இருந்தது.

சௌதரி: புரட்சித் திட்டங்களுக்கோ அல்லது புரட்சிக்காரர்களுக்கோ நீங்கள் ஏதாவது உதவியதுண்டா?

நேரு: புரட்சிக் காரர்களில் சிலரையே எனக்குத் தெரியும், அவர்களில் சிலர் சிறையில் என்னுடன் இருந்தார்கள். சிரமகாலத்தில் என்னை அவர்கள் அணுகியபோது அவர்களுக்கு நான் பண உதவி செய்திருக்கிறேன்- அதிகம் இல்லையென்றாலும். காலத்தினுற் செய்த உதவி அது.

சௌதரி. நீதிமன்றங்களில் புரட்சிக்காரர்கள்சார்பாக நீங்கள் வாதாடியது உண்டா?

நேரு. ஆம் காக்கோரி வழக்கில் எனக்கு அக்கறை இருந்தது. புரட்சிக்காரர்கள் சார்பாக வழக்காட நான் ஏற்பாடு செய்துகொடுத்தேன்:

சௌதரி: புரட்சிக் காரர்களுள் யாரை நீங்கள் பெரிதாக மதித்தீர்கள்?

நேருஜீ; தனிப்பட்ட ஒருவரைக் குறிப்பிட்டுச் சொல்வது ஓரவஞ்சகமாகிவிடும். கூறவேண்டுவது அவசியமாயின் புரட்சிக்காரர்களுள் யதின்தாசை நான் பெரிதும் மதித்தேன் எனலாம்.

சௌதரி, நாடு சுதந்திரம் அடைய தங்கள் கருத்துப்படி எந்த அளவுக்குப் புரட்சியாளர்கள் உதவியுள்ளார்கள்?

நேருஜி; இதுகுறித்துஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மந்தகதியில்வாழ்ந்தமக்களைவிழிப்படையச் செய்ததும் தேசத்தின்அவல நிலைகுறித்துமக்களிடையேஅதிர்ச்சி உண்டாகச் செய்ததும் அவர்கள்செய்த உதவியாகும்.

பயன்தரத்தக்க சரியான போராட்டமுறையை அறியாதகாரணத்தினுல்இந்தியா போன்றநாட்டில் வாழும் தனிநபர்கள் துணிச்சலுடன் பயங்கரமான போராட்டமுறையில் இறங்குகிறுர்கள். இத்தகைய தனிநபர்போராட்டமுறைமூலம் நாம் வெகு தூரம் முன்னேற்றம் காண முடியாது. சூதுவாது இல்லாத போராட்டமுறையாகும் இது.

**ஒன்றும்செய்யாமல்இருப்பது செத்துப் போனதற்குச் சமம்.ஒன்றும்செய்யாமல் இருப்பதைவிட, இது உகந்த முறையாகும். நாடு அரசியலில் அடிமைப் பட்டுக் கிடக்கும்காலத்தில் ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பது உயிர்இல்லாதநிலைக்குஒப்பாகும்இந்த நிலையில்தனி நபர் போராட்டத்துக்கு அதற்குரிய மதிப்பு உண்டு.**

இந்த எதிர்ப்பு உணர்ச்சியால் பயன் உண்டா இல்லையா என்பதில் இதன் மதிப்புஇல்லை. அதன் மூலம் மக்களை விழிப்படையச் செய்யும் ஆற்றல் அதற்கு இருக்கிறது- உற்றசமயத்தில் அது நிகழவேண்டும் யாரோகுண்டை வீசுகிறுர்கள் எனவைத்துக்கொள்வோம், செயல்



ஆதாயம் இருப்பினும் தக்க தருணத்தில் அது நிகழவில்லையென்றுல் அந்தச் செயல் தனது முக்கியத்துவத்தை இழந்துவிடுகிறது. ஆகவே பலாத்காரம் என்னும்சொல்லையும்; ''புரட்சிகரம்'' என்னும் சொல்லையும் இணைத்துச் சொல்வது சரியன்று.

சௌதரி- இந்த ஊழியர்களைப் பயங்கரவாதிகள் என்று கூறுவது பொருந்துமா?

நேருஜி- நான் அவ்வாறு நினைக்கவில்லை, செயல் ஒன்ருக இருப்பினும் அதன்பொருள் வேருகிவிடுகிறது. உதாரணமாக தேசபக்தன் ஒருவன் கொலைசெய்கிறுன்— கொள்ளைக்காரன் ஒருவன் கொலை செய்கிறுன்.இவற்றினிடையே நிச்சயமாக வேற்றுமை உண்டு. தேசத்தின் நிலைமைகளையும் காலத்தையும் கருத்திற்கொண்டு தேசபக்தனின்செயல் அமைய வேண்டும்- ஒருவனுடைய செயல் இவற்றுக்குச் சம்பந்தமில்லாதிருந்தால் அவனைப்புரட்சிக்காரன் என்று கூறமுடியாது- புரட்சிக்காரன் புரட்சியின்பொருட்டே காரியங்களைச் செய்கிறுன். பலாத்காரம் செய்வது மட்டும் புரட்சியாகிவிடாது.

புரட்சிக்காரன் ஒருவன் விவேகமின்றிபலாத்காரநடவடிக்கைகளில்இறங்குவானுயின் அதுபுரட்சியாகாதுபுரட்சிக்கு மாறுபட்ட ஒருஎதிர் நடவடிக்கையாகும், அது- பலாத்காரவழியிலோ அல்லது பலாத்காரமற்ற வழியிலோ நாட்டின் சுதந்திரத்தைக் கருத்திற்கொண்டுஒரு இயக்கம் நடைபெறுமாயின் அது புரட்சியின் பாற்பட்டதாகும், பலாத்காரத்தைக் கொண்ட இயக்கம் என்பதற்காக எந்த ஒரு இயக்கமும் வளர்வது இல்லை.

மக்களை ஒரு துறையில் நடத்திச் செல்வதற்குப் பதிலாகக் குண்டு வீசத்தொடங்கினுல் மக்கள் திகிலடைந்து அந்தத்துறையிற் செல்ல மாட்டார்கள். பொருளாதார அரசியல் சமூகநிலைமைகள் ஒருதுறையில் செல்லுமாறு மக்களை அழுத்துவதானுல் மக்கள் குறிப்பிட்ட ஒரு துறையிற்தான் செல்வார்கள். அப்போது இயக்கத்தின் போக்கு மக்களைத் திரட்டி ஆர்வத்துடன் செயலில் ஈடுபடச் செய்வதாக அமைய வேண்டும்,

பலாத்காரத்தின் மூலம் அல்லது பயங்கரத்தின் மூலம் சில சமயம் நன்மையும் விளையலாம்.சில சமயங்களில் தீமையும் விளையலாம். 1905—06இலநிலைமைகளால் சிலசில பலாத்காரச் செயல்கள் நன்மைபயந்தன- உணர்ச்சியற்று இருந்த சமூகத்தை உலுப்பி உணர்ச்சி பெறச் செய்தது. ஊக்கமும் துணிவும் உள்ளசெயல்களை வைத்து சமூகத்தைச் செயலில் இறங்கத் தூண்டிற்று.

ஆனுல் அதே செயல்கள் காந்ஜியின் காலத்தில் புரட்சிக்கு மாறுபட்ட செயல்கள் ஆயின. மக்களை விழிப்படையச் செய்ய வேண்டும் என்ற பேச்சுக்கு அப்போது இடம் இல்லை.காந்திஜியின் இயக்கம் அஹிம்சையை அடிப்படையாகக்கொண்டது அதனுல் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடக்கு முறையைக் சாட்டிலும் பலாத்கார நடவடிக்கைகள் காந்திஜியின் இயுக்கத்துக்கு தடையாயும் தீமை விளைவிப்பதாயும் இருந்தன, காந்திஜியின் இயக்கம் புரட்சிகரமானது, அதனுல்பலாத்காரம்அந்தப் புரட்சிக்கு மாறுபட்டதாயிற்று, குறிக்கோளும் அதே குறிக்கோள்.மக்களும் அதே மக்கள்- ஆயினும் சூழ்நிலையும் சந்தர்ப்பமும் வேறுபட்டுவிட்டதனுல்அது புரட்சிக்கு மாறுபட்ட செயலாயிற்று.


## யாழ். பொது நூலக நம்பிக்கை நிதிக்கணக்கு.

''யாழ் பொதுசன நூல்நிலைய நம்பிக்கை நிதி'' என்றபெயரில் யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியிலுள்ள இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் திறக்கப்பட்டுள்ள இல.2893கணக்கிற்கு அனுப்பிவிட்டு தனக்கு அறிவிக்கும்படி யாழ் மாநகரசபை கேட்டுக்கொள்ளுகிறது.''

# கிழக்கு திமோரின் விடுதலைப் பிரச்சினையில் ஸ்ரீலங்கா மதில்மேற் பூனையாகியது

## 'ஆசியானில் சேருவதற்காக அணிசேராக் கொள்கைகளுக்குப் புதைகுழி!

இந்தோனேசியாவின் ஆக்கிரமிக்குட் படுத்தப்பட்டிருக்கும் கிழக்குத் திமோர் மக்களின் மறுக்க முடியாத சுயநிர்ணய உரிமையையும் சுதந்திரத்தையும் மீண்டும் உறுதிப்படுத்தும் தீர்மானமொன்று ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது:

22 அணிசேரா நாடுகளினால் தயாரிக்கப்பட்ட இத்தீர்மானத்துக்கு ஆதரவாக 58 வாக்குகளும் எதிராக 40 வாக்குகளும் கிடைத்தன. 42 நாடுகள் இதற்கு வராமலிருந்துவிட்டன.

சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள மரபுகளுக்கும் விதிகளுக்கும் அமைய கிழக்குத்திமோர் மக்களுக்கு தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் உரிமையுண்டென்று இத்தீர்மானம் வலியுறுத்துகிறது.

கிழக்குதிமோர் மீதுகடைசியாக ஆதிக்கம் செலுத்திய போர்த்துக்கல் இதில் தலையிட்டுகிழக்குத்திமோர்மக்களின் சுயநிர்ணய உரிமையையும் சுதந்திரத்தையும் நிலைநாட்டப்பாடுபட வேண்டும் என்றும் இத்தீர்மானம் வலியுறுத்துகிறது.

இத்தீர்மானத்துக்குஆதரவாக வாக்களித்தநாடுகளில் சீனு சோவியத் யூனியன், வியட்னும் ஆகியவையும் உள்ளடங்கும், கம்பூச்சியாவின் பொல்பொட்அரசு எதிராக வாக்களித்தது-

'ஆசியான்' நிறுவனநாடுகளான, சிங்கப்பூர், மலேசியா பிலிப்பைன்ஸ் தாய்லாந்து, இந்தோனேசியா ஆகியவை தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன.

'ஆசியான்' ஸ்தாபனத்தில் கூட்டுச்சேர ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் அணிசேரா இயக்கத்தைச்சேர்ந்த நாடு என்றுகூறப்படும் சிறீலங்கா, வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் மதில்மேல் பூனையாக இருந்தது. பாகிஸ்தானும் அவ்வாறே நடந்துகொண்டது.

# ஈழவிடுதலை இயக்கத்தை உருவாக்கிய தமிழ் தலைவர்களால்....

—1-ம் பக்கத் தொடர்

உறுப்பினரின் வீடு, ஆகியன எரித்துச் சாம்பலாக்கப்பட்டன.

இதையடுத்து சிறீலங்கா நாடாளுமன்றத்திலிருந்து எதிர்க்கட்சிதன்னைவிலத்திக் கொண்டது. பொலீஸ்படையைச் சேர்ந்த எந்த ஒருவருக்கும் எதிராக கிறிமினல் குற்றப்பத்திரிகை இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை.

யாழ்ப்பாணத்துக்குச்செல்லும் ஒரு விருந்தினர், அங்கு வேறுபட்ட ஒரு இலங்கையைக் காண்கிருர். சுதந்திர வர்த்தக வலயங்கள்—ஜெர்மன் உல்லாசப் பயணிகள்—ஜப்பான் கார்கள், இரண்டு ஜெுனிகள்,—போன்ற தெற்கிலுள்ள அபிவிருத்திகள் யாழ்ப்பாணத்துக்கு இனிமேல்தான் வரவேண்டும். தமிழர்கள் சிங்களவர் சதி குறித்து சந்தேகிக்கிருர்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள காட்சிகளை ஒருவர் பார்த்தால் முதலில் எரியூட்டப்பட்ட கடைகள், அடுத்து தீவைப்பினுல் கருகிப் போன நூலகம், அதன் பின் எரிக்கப்பட்ட உள்ளூர்ப் பத்திரிகை அலுவலகம், இப்பத்திரிகையின் நிர்வாகி, தீயின் நாக்குகளிலிருந்தும் வெறிபிடித்த பொலீசாரிடமிருந்தும் தப்புவதற்காகஅலுவலகக்குளியலறையில்நுழைந்து உள்ளேபூட்டிவிட்டு, தண்ணீரைத் திறந்து தம்மீது கொட்ட வைத்து, தீக்காயங்களுடன் தப்பியவர். இறுதியாக பொலீசாரிடமிருந்து உயிர் தப்புவதற்காக அதே இரவில் தப்பியோடிய யாழ் எம்.பி. யோகேஸ்வரனின் எரியுண்ட வீட்டைப் பார்க்கிருேம்.

சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையேபலநூற்ருண்டுகளாக இருந்து வரும் தொடர்ச்சியான பகைமை பற்றி எடுத்துக் கூறிய யோகேஸ்வரன் 8000, சதுர மைல்களைக் கொண்டதாக உத்தேச தமிழீழ நாடுஅமையும் என்று கூறுகிருர்.

அவரும் ஏனைய தமிழர்களும் இதை ஏன் வேண்டும் என்கிருர்கள்? சிறீலங்கா அரசு மேற்கொண்டுவரும் ஒடுக்குமுறையும், துன்புறுத்தல்களுமே இதற்குக் காரணம்,

1948இல்சுதந்திரம்கிடைத்தபோது தமிழர்கள் சமபல பிரதிநிதித்துவம் கேட்டார்கள். சிங்களவர்கள் அதற்கு மறுத்துவிட்டு, பெரும்பான்மை இனவாத நடவடிக்கையிலிறங்கினர், 'சிங்களம் மட்டுமே உத்தியோக மொழியானது. இலங்கை பௌத்தர்களின் பழைய தாயகமான 'சிறீலங்கா' ஆக மாறியது.

இன்றுதமிழர்களுக்குஅரச சேவைகளில் அவர்களுக்குரிய வீதாசாரத்தை விட குறைவாகவே இடம்கிடைக்கிறது. ஆக ஐந்துசதவீதமே. 16000, பேர் கொண்ட பொலீஸ்படையில் 15, 500 பேர் சிங்களவர்கள். பல்கலைக்கழக அனுமதியில் சிக்கலான 'கோட்டா' முறையால் தமிழர்கள் பெரும் பாதிப்படைகின்றனர்.

தமிழர் [illegible] விடுதலைக் கூட்டணி அஹிம்சை அடிப்படையிலான ஓர் அரசியல்தீர்வையே எதிர்பார்க்கிறது, 'நட்புநாடுகள்' நெருக்கடி கொடுத்தால் சிறீலங்கா அரசு அதற்குப் பணிந்து தமது வழியில் வரும்என்று அவர்கள்கருதுகிருர்கள். நட்பு நாடுகள் என்னும்போது அவர்கள் இந்தியாவையே எதிர் பார்க்கிருர்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தபேராசிரியர் ஒருவர்பின் வருமாறு கூறினுர்:—

"மூன்று நான்கு ஆண்டுகளுக்குமுன்புவரைஎமது தலைமுறையைச் சேர்ந்த அறிவு படைத்த மக்கள்எல்லாம்ஐக்கியஇலங்கையில் நம்பிக்கையிழக்காமலே இருந்து வந்தனர். இப்பொழுதோ முன்பிருந்ததுபோன்று தனியாக தனியரசாகத்தான் வாழ வேண்டும் என்ற எமக்குக் கசப்பான கருத்தை நாமும் ஏற்றே தீரவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். அதிகாரப்பங்கீடுஎன்பது முழு அளவில் இடம்பெற வேண்டும்.

"அற்பசலுகைகளை வழங்கும் சமாதான உடன்படிக்கைகளினுல் நிலைமையைச் சமாளித்துவிடலாம் என்று கருதுபவர்கள் நிலைமையைச் சரியாகப்புரிந்து கொள்ளாதவர்களே, தமிழ் இளைஞர்களின் அரசியல்சிந்தனையின் அடித்தளத்தில் 'ஈழம்' எனும் கருத்து ஆழமாகவேரூன்றிவிட்டது. ஒரு பெரும் துன்பியலை நாம் தவிர்த்துக் கொள்ளவேண்டுமானுல் சிங்களமக்களின் அடிப்படைச் சிந்தனையில் பெரிய மாற்றம்ஏற்பட்டாக வேண்டும்"

நான் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட மறுநாள் சைக்கிளில் வந்ததமிழ் இளைஞர்கள், இராணுவச்சிப்பாய் ஒருவரைச்சுட்டுக் கொன்றுள்ளனர்."

### மலையகத்திலிருந்து மட்டுநகருக்கு 65 அகதிகள் [illegible]

மலையக[illegible] கலவரங்[illegible]தில் ஏற்பட்ட முடி[illegible]களால் அங்கு வாழ ப[illegible]த நிலைக்குத் தள்ளப்[illegible]ட மலையக தமிழர்கள் அறுபத்தைந்துபேர் தமிழ்ஈழத்தி[illegible] மட்டக்களப்பில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்கள் தற்போது மாமாங்கேஸ்வர ஆலய [illegible] மிட்டுள்ளனர்,

சுதந்திரன் உங்களுக்கு கிடைக்கவில்லையா?

**உடனே**

ரூபா 150 [illegible] செலுத்தி சந்தாதாரராகுங்கள் உங்கள் பிரதியை உறுதி செய்து கொள்ளுங்கள்.

**கெபிட்டி** 2-வது வாரம்

(கொட்டாஞ்சேனை)

தினசரி 3 காட்சிகள், சனி ஞாயிறு 4 காட்சிகள்

ரெபர்ட் சான்ட்ஸ், துப்பறியும் ஏஜண்டாக

-நடித்த-

திகில் மர்மங்கள் நிறைந்த படம்.

Columbia Pictures Presents

மர்மம்! மர்மம்!! மர்மம்!!!

BILLION DOLLAR THREAT

**செல்லமஹால்** 2-வது வாரம்

(கொட்டாஞ்சேனை)

தினசரி 4 காட்சிகள்!

எம். ஜி. ஆர். (இருவேடங்கள்) லதா

எம். என். நம்பியார், ஜஸ்டின்,

மற்றும் பலர் நடித்த

**சிரித்து வாழ வேண்டும்**

(வண்ணப்படம்)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால், யாழ்ப்பாணம், மகாத்மா காந்தி வீதி, 15-ஆம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1981-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.